## இனிமையான குழந்தைகளே! நீங்கள் ஆன்மிக யாத்திரையில் இருக்கிறீர்கள், நீங்கள் தேக உணர்வு மற்றும் பழைய உலகை மறந்து வீடு திரும்பிச் செல்ல வேண்டும். ஒரு தந்தையின் நினைவில் இருக்க வேண்டும்.

கேள்வி: சாட்சியாகி எந்த ஒரு விசயத்தை ஒவ்வொருவரும் தனக்குத் தானே கேட்க வேண்டும்?

பதில்: இவருடைய மனோநிலை எவ்வாறு உள்ளது? தந்தையை அடைந்து அதீந்திரிய சுகத்தின் அனுபவம் செய்கிறாரா அல்லது இல்லையா? என்று எவ்வாறு தந்தை சாட்சியாகி ஒவ்வொரு குழந்தையின் மனோநிலையைப் பார்க்கின்றார்! அவ்வாறு, நான் என்னை நானே சௌபாக்கிய சாலியாக எந்தளவு புரிந்திருக்கின்றேன்? எவ்வளவு குஷி உள்ளது? தந்தையிடமிருந்து ஆஸ்தி முழுவதும் அடைந்திருக்கின்றேனா? வாரிசுகளை உருவாக்கி இருக்கின்றேனா? யோகபலத்தின் மூலம் பாவங்களை எரித்து புண்ணிய ஆத்மா ஆகியிருக் கின்றேனா? என்று தன்னைத் தான் கேட்க வேண்டும்.

பாடல்: இரவுப் பயணிகளே களைப்படைய வேண்டாம் ....

ஓம்சாந்தி. எவ்வாறு ஆத்மா சாந்த சொரூபமாக உள்ளதோ, அவ்வாறு பரமபிதா பரமாத்மாவும் சாந்த சொரூபமாவார் என்பது குழந்தைகளுக்குப் புரியவைக்கப்பட்டு இருக்கிறது. ஓம் என்றால் நான் ஆத்மா என்று ஓம் என்பதன் அர்த்தமும் புரியவைக்கப் பட்டுள்ளது, சரீரம் மாயை ஆகும். சந்நியாசிகள் நான் பிரம்மம் என்று கூறுகின்றனர். அவர்கள் பிரம்மத்தை ஈஸ்வரன் என்று நினைக்கின்றனர். படைப்பை மாயை என்று கூறிவிடுகின்றனர். இதையே அஹம் பிரம்மஸ்மி (நானே பிரம்மம்) என்பதன் அர்த்தமாகக் கருதுகின்றனர். ஆனால், அனைத்தும் தவறு ஆகும். மனிதர்கள் என்னவெல்லாம் செய் கின்றனரோ, அவை அனைத்தும் மனிதர்களால் சொல்லப்பட்ட வையின் ஆதாரத்தில் செய் கின்றனர். ஒருவர் என்னவெல்லாம் புரியவைத்து இருக்கிறாரோ, என்ன பழக்கத்தை ஏற்படுத்தினாரோ, அதன்படி நடக்கின்றனர். அவருக்குப் பெயர் கிடைத்து விடுகிறது. இது கூட நாடகத்தில் பதிவாகி உள்ளது. ஹே! பயணிகளே, எங்கே செல்லும் பயணிகள்? என்று இப்பொழுது தந்தை கேட்கின்றார். பரந்தாமத்திற்குச் செல்லும் பயணிகள். இது ஆத்மாக் களுக்கான ஆன்மிக யாத்திரை ஆகிவிட்டது. ஆத்மாக்கள் வீட்டிற்குத் திரும்பச் செல்வதற்கான யாத்திரை ஆகும். வழிகாட்டியோ (கைடு) அவசியம் வேண்டும். வெளிநாட்டிலிருந்து வருகின்றார் என்றால் அவர்களுக்கு முக்கியமான அனைத்து இடங்களையும் காண்பிப்பதற்காக வழிகாட்டி கிடைக்கின்றார். பரமபிதா பரமாத்மாவுக்கு வழிகாட்டி என்று கூறப்படுகின்றது. வழிகாட்டிகளுக்கு கூட கைடு என்று கூறப்படு கின்றது. குழந்தைகளே! குழந்தைகளாகிய உங்களை வீட்டிற்குத் திரும்ப அழைத்துச் செல்வதற்காக இப்பொழுது நான் வந்திருக்கின்றேன் என்று தந்தை கூறு கின்றார். இது எவ்வளவு முதல்தரமான யாத்திரை! இதற்காகவே பக்தர்கள் அரைக் கல்பமாக பக்தி செய்து வந்திருக்கின்றனர். வாருங்கள், எங்களை தங்களுடைய பரந்தாமத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் என்று கூறுகின்றனர். அந்த உலகாயத யாத்திரைகளோ அனேக விதம் உள்ளன. எத்தனை உலகாய வழிகாட்டிகள் உள்ளனர்! ஆன்மிக வழிகாட்டி ஒரே ஒருவர் ஆவார். அவர்கள் பிறகு பாண்டவ

சேனை, சக்தி சேனை என்று காண்பித்துவிட்டனர். யுத்தத்திற்கான எந்த விசயமும் கிடையாது. ஹே, இனிமையான குழந்தைகளே! முதலில் அவர் நமது தந்தையாவார் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும் என்று தந்தை அமர்ந்து புரிய வைக்கின்றார். உங்களுடைய புத்தியின் தொடர்பு தந்தையிடம் செல்ல வேண்டும். நம்மை வீட்டிற்குத் திரும்ப அழைத்துச் செல்வதற்காக தந்தை வந்திருக்கின்றார். இங்கே இது துக்கதாமம், பதீத உலகம், நரகம் ஆகும். ஹெல் (நரகம்) என்ற பெயர் உள்ளதல்லவா! சொர்க்கலோக பதவி அடைந்தார். என்று பாடவும் செய்கின்றனர், எனில், அவசியம் அது ஏதோ ஒரு புதிய பொருளாகும். மனிதர்கள் அறியாமல் சொல்ல மட்டும் செய்கின்றனர். பழக்க வழக்கம் இருந்து வருவதால், இந்த ஜோதி ஜோதியோடு கலந்துவிட்டது, அதாவது ஆத்மா பரமாத்மா ஆகி விட்டது என்று கூறிவிடுகின்றனர். இது நாடகம் ஆகும் என்பதை அறியவில்லை. ஆத்மா அழிவற்றது ஆகும். அந்த அழிவற்ற ஆத்மாவில் 84 பிறவிகளின் நடிப்பு பதிவாகியுள்ளது. பரம ஆத்மாவிலும் கூட நடிப்பு பதிவாகி உள்ளது. இதை நாடகத்தின் விதி என்று கூறப்படுகின்றது. நடிகர்களாகிய உங்களுக்கு பரமாத்மாவை விட அதிகமான நடிப்பு உள்ளது. அவரோ படைப்பாளர், இயக்குனர் ஆவார். தேவி, தேவதை களாக ஆகக்கூடிய உங்களுக்கு அனை வரையும் விட அதிக நடிப்பு உள்ளது. ஆதியிலிருந்து இறுதிவரை உங்களது நடிப்பு உள்ளது. சத்யுக, திரேதாயுகத்திலோ தந்தையின் நடிப்பு கிடையாது. அங்கே பாபா எதுவும் செய்ய வேண்டிய தில்லை. இந்த சமயம் நான் அதிகமான சேவை செய்கின்றேன். குழந்தைகளாகிய உங்களையும் மற்றும் பக்தர்களையும் மகிழ்விக்க வேண்டியதாக உள்ளது. பக்தர்களுக்கு காட்சி கிடைக்கிறது என்றால் நாங்கள் ஈஸ்வரனை அடைந்துவிட்டோம் என்று அவர்கள் நினைக்கின்றனர். பக்தர் களுக்கு எவ்வளவு புகழ் உள்ளது! அது பக்த மாலை ஆகும் மற்றும் இது ருத்ர மாலை ஆகும். ஞான மாலையில் பக்தி கிடையாது. அவர்களோ ஞானக் கடலிடமிருந்து ஞானத்தை தாரணை செய்து பக்தர்களையும் கூட விடுவிக்கின்றார்கள். அவர்களுடையதே பிறகு ருத்ர மாலையாக உருவாகின்றது.

நாம் ஆன்மிக யாத்திரையில் இருக்கின்றோம் என்பதை இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் புரிந்திருக்கிறீர்கள். இல்லறத்தில் இருந்து கொண்டே நினைவை அதிகரிக்க வேண்டும். அவர் மிகவும் இனிமையான பொருள் ஆவார். தந்தை படைப்பாளராகவும் இருக்கின்றார், குழந்தை களைப் படைக்கின்றார். பிரம்மாவின் வாய்வழி வம்சத்தினரை உருவாக்கி இருக்கின்றார். நாங்கள் சிவபாபாவினுடைய குழந்தைகள் என்று அனைவரும் கூறுகின்றனர். பிறகு, மன்மனாபவ என்ற முக்கியமான டைரக்ˆனைக் கொடுக்கின்றார். உங்களுக்குக் கற்பிப்பதற்காக நான் வந்திருக் கின்றேன். சரியாக 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பும் நான் இந்த இராஜயோகத்தைக் கற்பித் திருந்தேன். நான் நிராகாரமான ஆத்மாக்களுடன் பேசுகின்றேன். நீங்கள் தன்னுடைய அங்கங்களை ஆதாரமாக எடுக்கின்றீர்கள். நான் இவருடைய அங்கங்களை ஆதாரமாக எடுக்கின்றேன். இப்பொழுது நீங்கள் வீட்டிற்குத் திரும்பச் செல்ல வேண்டும். ஆகையினால், பழைய உலகத்தை மறக்க வேண்டும். இதையே சந்நியாசம் என்று கூறப்படுகின்றது. முதன்முதலில், நான் ஆத்மா, தேகமல்ல என்ற நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். இந்த தேக உணர்வை மறக்க வேண்டும். பழைய உலகத்தை விடவேண்டும். இப்பொழுது நான் வீட்டிற்குத் திரும்ப அழைத்துச் செல்வதற் காக வந்திருக்கின்றேன் எனில், என்னுடைய ஸ்ரீமத்படி நடங்கள். தேக

சகிதம் தேகத்தின் அனைத்து சம்பந்தங்கள் முதலியவைகளை மறந்துவிடுங்கள். ஒரு தந்தையை நினைவு செய்ய வேண்டும். உழைப்பில்லாமல் எந்த இராஜ்யமும் கிடைக்காது. விஷ்வத்தின் எஜமானர் ஆகவேண்டும். என்ன ஞானம் என்னிடம் உள்ளதோ, அது இப்பொழுது உங்களிடத்திலும் வந்துவிட்டது. உங்களுக்கு சுருக்கமாகவும் மற்றும் விரிவாகவும் கூட புரிய வைக்கப் படுகிறது. விதையிலிருந்து முழு மரம் உருவாகிறது. பிறகு, மரத்தைப் பற்றி விரிவாகச் சொல்ல வேண்டுமானால், அது மிகவும் விஸ்தாரம் ஆகும். இப்பொழுது இந்த பழைய மரத்தை மறந்துவிடுங்கள் என்று தந்தை கூறுகின்றார். இப்பொழுது என்னை மட்டும் நினைவு செய்துகொண்டே இருங்கள். பகவானின் மகாவாக்கியம் - நான் உங்களுக்கு இராஜயோகம் மற்றும் படைப்பின் ஞானம் கொடுக்கின்றேன். இந்தப் படைப்பை எவ்வாறு படைக்கின்றேன்? எவ்வாறு விருத்தி அடைகிறது? இது நாடகத்தைப் புரிந்து கொள்வதாகும். அதையும் மனிதர்களே புரிந்துகொள்வார்கள். மனிதர்களுக்கே பகவான் கற்பிப்பார். முக்கியமானது கீதை ஆகும். கீதைக்கு புகழ் உள்ளது. கீதையில் பகவானின் மகாவாக்கியம் உள்ளது. வியாச பகவானின் மகாவாக்கியம் என்பது கிடையாது. கிருஷ்ண பகவான் கீதை சொன்னார், வியாசர் எழுதினார் என்று கூறுகின்றனர். அது பின்னால் எழுதப்பட்டது அல்லவா. இந்த சமயத்தில் எழுதப்படுவது விநாசம் ஆகிவிடும். இவை அனைத்தையும் நீங்கள் ஒன்று சேர்த்தாலும் இரண்டாயிரம், நாலாயிரம் புத்தகங்களை உருவாக்குவீர்கள். அந்த கீதையின் புத்தகங்களோ இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான எண்ணிக்கையில் உள்ளது. மீண்டும் இதே பழமையான சாஸ்திரம் வெளிப்படுகின்றன. இதிலிருந்து பிறகு காப்பி (பிரதி) செய்கின்றனர். அந்த கீதையில் வார்த்தைக்கு வார்த்தை என்ன உள்ளதோ, அதுவே மீண்டும் உருவாகும். நாடகத்தில் அதுவே பதிவாகியுள்ளது. எந்த சமயத்தில் சாஸ்திரங்களை எழுதினார்களோ, அதே சமயத்தில் அவசியம் எழுதுவார்கள். இலட்சுமி, நாராயணராகவும் அவர்களே (அதே ஆத்மாக்களே) ஆகிக் கொண்டிருக்கின்றனர். அவர் களுடைய மாளிகை கூட அதே மாளிகை உருவாகும்.

இந்த சமயம் பாபா இந்த கல்ப மரம் மற்றும் நாடகத்தின் ஞானத்தை கொடுத்திருக் கின்றார். இப்பொழுது நீங்கள் சந்திக்கின்றீர்கள், கல்ப கல்பம் சந்தித்துக்கொண்டே இருப்பீர்கள் என்று கூறுகின்றனார். பகவானின் மகா வாக்கியம் என்று கூட எழுதப் பட்டிருக்கிறது. நான் உங்களுக்கு இராஜயோகத்தைக் கற்பிக்கின்றேன். பகவான் புதிய சிருஷ்டியைப் படைக்கின்றார், அவசியம் அவர் இராஜா ஆக்குவார். துவாபரயுக இராஜாவாக ஆக்கமாட்டார் அல்லவா! கல்ப கல்பமாக நான் சங்கமயுகத்தில் வருகின்றேன் என்று கூறுகின்றார். வழிகாட்டியோ இறுதி வரை கூடவே இருப்பார். அந்த குருக்கள் இறந்து விடுகிறார்கள் என்றால் பிறகு, அவர்களுக்குப் பின் வேறொருவர் அந்தப் பதவி வகிப்பார். நானோ உங்கள் அனைவரையும் வீட்டிற்குத் திரும்ப அழைத்துச் செல்ல வேண்டும் என்று தந்தை கூறுகின்றார். நான் என்னுடைய சமயம் முழுவதும் வருகின்றேன். இந்த விசயங் களை வேறு எவரும் புரியவைக்க முடியாது. கீதையில் கூட மன்மனாபவ என்ற வார்த்தை முதலிலும் மற்றும் இறுதியிலும் உள்ளது. என்னை நினைவு செய்யுங்கள் என்றே கூறுகின்றார். நான் உங்களை விஷ்வத்தின் எஜமானராக இந்த இலட்சுமி, நாராயணரைப் போல் ஆக்குவேன். இராஜாக்களுக்கெல்லாம் இராஜா

ஆக்குவேன். அதே சூரியவம்ச, சந்திரவம்சத்தில் நீங்கள் மறுபிறவி எடுப்பீர்கள். இப்பொழுது நீங்கள் கலியுகத்தில் இருக்கிறீர்கள், கலியுகத்திலிருந்து உங்களை சத்யுகத்திற்கு அழைத்துச் சென்றுகொண்டு இருக்கின்றேன்.

நான் கல்ப கல்பம் வந்து ஸ்தாபனை செய்கின்றேன். இந்த சமயத்தில் தான் வருவேன். நானும் நாடகத்திற்கு வசப்பட்டு இருக்கின்றேன். இவருடைய மனோநிலை எவ்வாறு உள்ளது? எல்லை யற்ற தந்தையை அடைந்து அதீந்திரிய சுகத்தை அடைந்திருக்கிறாரா அல்லது இல்லையா? என்று நான் சாட்சியாகி ஒவ்வொருவருடைய மனோநிலையைப் பார்க்கின்றேன். அவ்வாறு, நான் என்னை சௌபாக்கியசாலி என்று எந்தளவு புரிந்திருக் கின்றேன்? தந்தையின் குழந்தை ஆகியிருக்கிறேன் எனில், தந்தையிடமிருந்து முழுமையாக ஆஸ்தியை அடைந்திருக் கிறேனா? என்று ஒவ்வொருவரும் தனது உள்ளத்தில் கேளுங்கள். பாபா அனைவரையும் இலட்சுமி, நாராயணர் ஆக்கிவிடுவார் என்பது கிடையாது. இது படிப்பு ஆகும். யார் எந்தளவு முயற்சி செய்வார்களோ, அந்தளவு பலன் அடைவார்கள். பள்ளியில் படிக்கும்பொழுது இலட்சியம் உள்ளதல்லவா! 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு போலவே நமக்கு தந்தை வந்து இராஜ யோகத்தைக் கற்பித்துக்கொண்டு இருக்கின்றார் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். பகவானின் மகாவாக்கியம் - நான் உங்களை பதீத மனிதரிலிருந்து பாவனமான தேவதை ஆக்குகின்றேன். பகவான் கற்பிக்கின்றார் எனில் அவசியம் பகவான் பகவதி ஆக்குவார் அல்லவா! எவ்வாறு வக்கீல், வக்கீலை உருவாக்கு கின்றார். பக்தி மார்க்கத்தில் பகவதி பகவான் என்று கூறுகின்றனர், ஆனால், அவர்களோ தேவி தேவதைகள் ஆவார்கள். ஆதி சனாதன தேவி தேவதை தர்மம் என்று கூறப்படுகிறது. எவ்வாறு தந்தை வந்து நமக்குக் கற்பிக்கின்றார் என்பதை நீங்கள் அறிந்திருக் கிறீர்கள். முக்கியமாக இலட்சியமும் புத்தியில் உள்ளது. சக்கரத்தை புத்தியில் சுற்றிக்கொண்டே தான் இருக்க வேண்டும். இல்லறத்தில் இருந்தாலும் தூய்மையாக இருக்க வேண்டும். தூய்மை ஆகவில்லை என்றால் தூய்மையான உலகின் எஜமானராக எவ்வாறு ஆகுவீர்கள்? இந்த நாடகத்தின் இரகசியத்தை வேறு எவரும் புரிந்துகொள்ள முடியாது. இந்தச் சித்திரங்கள் போன்ற வற்றைக் கூட தந்தை உருவாக்க வைத்தார். பாபா ஓவியர் அல்ல. இந்தப் பொருட் களை வேறு எவரும் செய்ய வைக்க முடியாது. இவை வரைபடங்கள் (மேப்) ஆகும். இது மரம் ஆகும், விதை மேலே உள்ளது. கல்ப விருட்சத்தின் கீழே ஜெகதம்பா அமர்ந்திருக் கின்றார், அவர் அனைவருடைய சுகத்தின் விருப்பத்தைப் பூர்த்தி செய்கின்றார். சத்யுகத்தில் துக்கத்தின் பெயரே இருக்காது. நாம் புது உலகின் எஜமானர்கள் ஆகிக்கொண்டு இருக் கின்றோம் என்று நீங்கள் கூறுவீர்கள். மனிதரிலிருந்து தேவதை ஆக்கினார் என்று சீக்கியர் கள் அவருடைய மகிமை பாடுகின்றனர். தேவி தேவதைகள் தான் சொர்க்கத்தின் எஜமானர் களாக இருந்தனர். அவர்கள் இப்பொழுது மற்ற தர்மங்களுக்கு மாறிவிட்டனர், பிறகு, அதிலிருந்து விடுபட்டு வருவார்கள். நாம் கூட முன்னர் இந்து தர்மம் என்று எழுதினோம். இப்பொழுது பிராமண தர்மத்தினர் என்று நாம் கூறுகின்றோம். நாம் பிராமண தர்மம் என்று எழுதுகின்றோம், ஆனால், அவர்கள் பிறகும் கூட இந்து என்று புரிந்துகொள்கின்றனர். ஏனெனில், அவர்களிடம் பிராமண தர்மம் என்ற வரிசையே கிடையாது. நாம் தேவி தேவதை என்று கூறினாலும் கூட அதை மாற்றி இந்து என்று எழுதிவிடுவார்கள். ஏனெனில், பிராமணன் மற்றும் தேவி தேவதை தர்மத்தின் பெயரே மறைந்துவிட்டது. நாம் தேவி தேவதை

ஆகுவதற்காக முயற்சி செய்துகொண்டு இருக்கின்றோம் என்பதை இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் அறிந்திருக் கிறீர்கள். அங்கே இராஜா, இராணி மற்றும் பிரஜைகள் ஆகிய அனைவருக்கும் இந்த இலட்சுமி, நாராயணரைப் போல் ஆடை இருக்கும். பீதாம்பரம் - இது சத்யுக சூரியவம்சத்தினரின் ஆடை ஆகும். திரேதாயுகத்தில் இராம இராஜ்யத்தில் வேறு ஆடை இருக்கும். பழக்க வழக்கம் வேறுபடு கிறது. கிருஷ்ணரை எப்பொழுதும் பீதாம்பரதாரி என்று கூறுகின்றனர்.

தந்தை நமக்கு சொர்க்கத்தின் ஆஸ்தி கொடுக்கின்றார் என்ற நம்பிக்கை இப்பொழுது இருக்க வேண்டும். இந்த மரணலோகம் அழிய வேண்டும். எப்பொழுது நீங்கள் நிரந்தரமாக தந்தையை நினைவு செய்துகொண்டே இருப்பீர்களோ, அப்பொழுது சம்பூரண நிர்விகாரி ஆகிவிடுவீர்கள். அந்த யோக பலத்தின் மூலம் பாவம் அழிந்துவிடும், புண்ணிய ஆத்மா ஆகிவிடுவீர்கள். நீங்கள் தந்தையிடம் அர்ப்பணம் ஆகின்றீர்கள், புண்ணியம் செய்கின்றீர்கள். பிறகு, நினைவின் மூலம் ஆத்மா தூய்மை ஆகிக்கொண்டே செல்கின்றது. யாருக்கும் புரிய வைப்பது மிகவும் சுலபமாகும். பகவானின் மகாவாக்கியம் என்று எப்பொழுதாவது கேள்வி யுற்று இருக்கிறீர்களா? சொர்க்கத்தை ஸ்தாபனை செய்யக்கூடியவர் அதே தந்தை ஆவார். தந்தை மற்றும் ஆஸ்தியை நினைவு செய்ய வேண்டும். மகாராஜா ஆக விரும்புகிறீர்கள் என்றால், நீங்கள் எத்தனை பிரஜைகளை உருவாக்கி யிருக்கிறீர்கள்? என்று சொல்லுங்கள். இன்னார் எனக்கு திருஷ்டி கொடுத்தார், அம்பு தைத்து விட்டது என்று அதிகமானோர் எழுதுகின்றனர். பிரஜைகளை உருவாக்குவது மற்றும் வாரிசை உருவாக்குவதற்கு அதிக முயற்சி செய்யவேண்டியதாக உள்ளது. மிகவும் சுலபமாகப் பிரஜைகள் உருவாகி விடுகின்றனர், பிறகு, சிம்மாசனத்தில் யார் அமர்வார்கள்? அதுவும் கூட உழைத்து உருவாக்க வேண்டும். மாயையை வென்றவராக, உலகை வென்றவராக ஆகவேண்டும். மாயையிடம் தோல்வியே தோல்வி அடைகிறீர்கள். தந்தையிடமிருந்து சக்தியைப் பெற வேண்டும். குழந்தைகளாகிய நீங்கள் இந்த உழைப்பை செய்ய வேண்டும். எந்த ஒரு விசயத்திலும் குழம்புகிறீர்கள் எனில், கேட்டுக்கொண்டே இருங்கள். தந்தை கற்பிக்கின்றார் எனில், இதில் எந்த சந்தேகமும் வரக்கூடாது அல்லவா! அனேக விதமான எண்ணங்களின் புயல் வரும். புத்தியின் தொடர்பை துண்டிப்பதற்கான முயற்சி செய்யும். புயல் அடிக்கும், மாயை நன்றாக துன்பப்படுத்தும். பிறகு, இவர்கள் மூளை கெட்டுவிட்டது என்று கூறுவார்கள். எந்த நோய் ஒருபொழுதும் வந்ததே இல்லையோ, அது இப்பொழுது வந்துகொண்டு இருக்கிறது. தடைகள் அதிகம் வரும், இதில் பலஹீனமானவர் ஆகக்கூடாது. நல்லது.

பாப்தாதா, இனிமையிலும் இனிமையான மம்மாவின் வெகு காலத்திற்குப் பிறகு தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்காக முக்கியமான சாரம்:

1. தந்தை, முதல் தரமான யாத்திரை என்ன கற்பித்திருக்கின்றாரோ, அந்த ஆன்மிக யாத்திரையில் இருக்க வேண்டும். ஸ்ரீமத்படி தேக சகிதம் அனைத்தையும் மறக்க வேண்டும்.

2. ஒருபொழுதும் மாயையின் புயல்களில் பலஹீனமானவர் மற்றும் சந்தேக

புத்தி உடையவர் ஆகக்கூடாது. எந்த விசயத்திலும் குழப்பமடையக் கூடாது.

வரதானம் : சதா நிறைந்த தன்மையின் அனுபவத்தின் மூலம் வளைவான பாதையை நேரானதாக ஆக்கக்கூடிய சக்தி அவதாரம் ஆகுக.

சதா சக்திகளின், குணங்களின், ஞானத்தின், குஷியின் பொக்கி^ங்களில் நிறைந்து இருந்தீர்கள் என்றால், நிறைந்த தன்மையின் போதையினால் வளைவான பாதையும் கூட நேரானதாக ஆகிவிடும். ஒருவேளை, காலியாக இருந்தீர்கள் என்றால் பள்ளம் ஏற்பட்டு விடும், மேலும், பள்ளத்தில் விழுவதனால் சுளுக்கு ஏற்பட்டுவிடும். யார் பலவீனமாக மற்றும் காலியாக இருக்கின்றார்களோ, அவர்களுடைய எண்ணங்களில் சுளுக்கு ஏற்பட்டு விடுகிறது. சக்தி அவதாரம் என்றால் வளைவை நேரானதாக ஆக்குவதற்கான காண்ட்ராக்ட் (ஒப்பந்தம்) எடுத்தவர் என்று அர்த்தம். பாதை வளைந்திருக்கின்றது என்று காண்ட்ராக்ட் எடுத்தவர் ஒருபொழுதும் கூற முடியாது. ஒருவேளை, யாராவது விழுகின்றார்கள் என்றால் கவனம் குறைவாக இருக்கிறது அல்லது புத்தி நிறைந்திருக்கவில்லை என்று அர்த்தம்.

சுலோகன்: ஆன்மிகத் தன்மையை தாரணை செய்யக் கூடியவர்கள் தான் ஆன்மிக ரோஜா மலர் ஆவார்கள்.